**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | திரு. பழனிச்சாமி |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம், துள்ளுக்குட்டிநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். கொய்யாப்பழம் வியாபாரம் செய்கிறேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். அசா1 ஐ தெரியும். அவரது மனைவியைத் தெரியும். அசா1 ன் மனைவி இறந்துவிட்டதாக சொன்னார்கள். எப்படி இறந்தார் என்று தெரியாது. அசா1 எனது மாமா. ஆஜர் எதிரிகளும் எனக்கு சொந்தக்கார்கள்தான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**அரசு தரப்பில் கு.வி.**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில், கடந்த 25.01.2020 ம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் எங்கள் ஊரில்

உள்ள சமூதாய திருமண மண்டபத்தின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரில் இருந்த சாக்கடை சுவற்றில் எங்கள் ஊரைச் சேர்ந்த ராமர் மகன் சதீஷ் என்பவர் சாக்கடையை கடந்து போவதற்காக போடப்பட்டிருந்த கல்லின் மீது காலை வைத்திருந்தார் என்றும் அப்போது கடைக்கு சென்றுவிட்டு அவ்வழியாக வந்த சின்னச்சாமி மனைவி அங்கம்மாள் என்பவர் சதீஷை பார்த்து வழிவிடுப்பா என்று சொன்னார் என்றும், அதற்கு சதீஷ் அங்காமளைப் பார்த்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றும், அதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், சத்தம் கேட்டு அங்கம்மாள் கணவர் சின்னச்சாமி அங்கு வந்போது, சதீஷ் என்பவரின் தாயார் மற்றும் தகப்பனார் இருவரும் அங்கு வந்து அங்கம்மாளை பார்த்து அசிங்கமாக பேசி, இவளை விடாதடா, அடிச்சுக் கொல்லுடா என்று சொன்னார் என்றும், அப்போது 1 வது எதிரி சதீஷ் ஓடிச்சென்று அருகில் கிடந்த விறகு கம்பை எடுத்து அங்கம்மாள் பின் தலையில் அடித்தார் என்றும், இதை பார்த்த அங்கம்மாள் கணவர் சின்னச்சாமியும், பிரபு மனைவி செல்வரதி மற்றும் அருகில் இருந்த மாரியப்பனும் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், மேற்படி சின்னச்சாமி உயிருக்கு பயந்துகொண்டு, அங்கம்மாளை அவரது கூட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல. நான் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. சிறிது நேரம் கழித்து அங்கம்மாள் மயக்கமாகிவிட்டார் என்றும், அவரை உசிலம்பட்டி பாலா மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அதன் பின் அங்கம்மாளை மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு மேலும் அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அங்கம்மாளை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்ததாக கேள்விப்பட்டேன் என்றும் இந்நிலையில் சிகிச்சையில் இருந்த அங்கம்மாள் 28.01.2020 ம் தேதி காலை சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார் என்றும் போலிஸ் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது

உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 7** |
| **Name** | : | திரு. மாரியப்பன் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் மதுரை, துள்ளுக்குட்டிநாயக்கனனூரில் குடியிருந்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அனைவரும் எனது உறவினர்கள் தான். 6 வது மாதம் நான் டீக்குடித்துக்கொண்டு இருந்த போது, சங்கையா என்ற SI என்னிடம் வெத்துப்பேப்பரில் கையொப்பம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், கடந்த 28.01.2020 அன்று காலை 07.00 மணிக்கு அசா1 சின்னச்சாமியின் மனைவியை கொலை செய்த சம்பவ இடத்தினை போலிசார் சம்பவ இடம்

பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் பெத்தனன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | திரு. பெத்தனன் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் மதுரை, துள்ளுக்குட்டிநாயக்கனனூரில் குடியிருந்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அனைவரும் எனது உறவினர்கள் தான். போஸ்ட்மார்ட்டத்திற்காக என்னிடம் வெத்துப்பேப்பரில் கையொப்பம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அதசாஆ.**2 **ஆகும்.** காவல்நிலையத்தில் வைத்து வெத்துப்பேப்பரில் வைத்து கையொப்பம் செய்தேன். அசா1, அசா7 எனது உறவினர்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், கடந்த

28.01.2020 அன்று காலை 07.00 மணிக்கு அசா1 சின்னச்சாமியின் மனைவியை கொலை செய்த சம்பவ இடத்தினை போலிசார் சம்பவ இடம் பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் மாரியப்பன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை